தினமணி

சுழல் கலப்பை, விதைப்பு இயந்திரம் செயல்விளக்கம்

First Published : 28 Jul 2012 01:11:16 PM IST

அரியலூர், ஜூலை 27: அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் அருகேயுள்ள தத்தனூர் கிராமத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் சுழல் கலப்பை, விதை விதைக்கும் இயந்திரம் ஆகியவற்றின் செயல்விளக்க நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார்.

வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அண்ணாதுரை, இளநிலைப் பொறியாளர்கள் கலைமணி, அலாவுதீன், சுந்தரமூர்த்தி, ரவிச்சந்திரன் ஆகியோர் சுழல் கலப்பை, விதை விதைக்கும் கருவி ஆகியவற்றின் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

கருவிகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதால் சீரான உழவு, பயிர்கள் செழித்து வளரும் என்றும், அதிக செலவு, ஆள் பற்றாக்குறை ஆகியவை குறைந்து நல்ல மகசூல் பெற்று வருவாய் பெற முடியும் என செயல்விளக்கத்துடன் எடுத்துக் கூறினர்.

நிறைவில் வேளாண்மை உதவி அலுவலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

நீலகிரி அணைகளில் இருந்து பவானி சாகருக்கு 1 டி.எம்.சி நீர்

First Published : 28 Jul 2012 06:28:40 PM IST

ஈரோடு, ஜூலை 28: நீலகிரி மாவட்ட அணைகளில் இருந்து பவானி சாகர் அணைக்கு நீர் எடுக்கப்படும் என தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசியபோது, தற்போது பவானி சாகர் அணையில் 1.7 டி.எம்.சி. தண்ணீர்தான் உள்ளது. பாசனத்துக்கும் இதரப் பணிகளுக்கும் போதுமான நீர் இல்லை என்பதால், நீலகிரி மாவட்ட அணைகளில் இருந்து நீர் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நீலகிரி மாவட்ட அணைகளில் 3.5 டி.எம்.சி நீர் இருப்பு உள்ளது. அவற்றில் இருந்து 1 டி.எம்.சி. நீர் பவானி சாகர் அணைக்காக நாளை முதல் எடுக்கப்படும் என்றார் அவர்.

குறுவை சாகுபடி பாதிப்புக்கு இழப்பீடு வழங்க வேண்டும்
First Published : 28 Jul 2012 01:13:41 PM IST

திருச்சி, ஜூலை 27 : குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை திறக்கப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கருத்தரங்கக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் த. தியாகராஜன் தலைமை வகித்தார்.கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

கனகசபை (டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்கத் தலைவர்): காவிரி டெல்டா பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள ஆண்டுப் பயிர்களான கரும்பு, வாழை, தென்னை, எண்ணெய்ப்பனை ஆகியவை முழுமையாக அழிந்து விடாமல் காப்பாற்றத் தேவையான தண்ணீரை அணையிலிருந்து திறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாசிலாமணி (விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர்): நிகழாண்டில் மேட்டூர் அணை திறக்கப்படாத நிலையில் காவிரியில் விதிமுறைகளை மீறி தங்கு தடையில்லாமல் மணல் அள்ளுவதை தடுத்து நிறுத்த வேண்டும். தண்ணீர் திறக்கப்படாத நிலையில், புதிய மணல் வருவதற்கு வழியில்லை. ஆனால் தொடர்ந்து மணல் அள்ளப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. விவசாயத்துக்கு மட்டுமின்றி குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும்.

ராஜா. சிதம்பரம் (தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர்): ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகளுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே குறுவை சாகுபடி செய்யாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 நிவாரணம் வழங்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டும்.

அயிலை சிவ. சூரியன் (விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர்): மேட்டூர் அணை திறக்கப்படாததாலும், பருவ மழை தவறியதாலும், மணல் கொள்ளையாலும் காவிரி பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் ஏரிகள், குளங்கள், கிணற்றுப் பாசனப் பகுதிகள் முற்றிலுமாக வறண்டு போகும் நிலையில் உள்ளன. சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் திறக்கப்படுமா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

புலியூர் நாகராஜன் (தோட்டக்கலை பயிர் உற்பத்தியாளர் சங்கம்): திருச்சி மாவட்டத்தில் காவிரியிலிருந்து 17 கிளை வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகள் நிகழாண்டில்

பயிர் செய்துள்ள வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் தண்ணீர் திறக்க வேண்டும்.

அய்யாக்கண்ணு (பாரதிய கிசான் சங்கம்): காவிரி பாசன பகுதியில் வறட்சி ஏற்படும் நிலையில் விவசாயிகள் பெற்ற கடன்களை கட்ட இயலாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும், அதிக காற்றால் அழிந்து விட்ட வாழைக்கும், பிற பயிர்களுக்கும் உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும். குறுவை சாகுபடி செய்யாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 நிவாரணம் வழங்க வேண்டும்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**ஏலக்காய் ஏலத்தில் புது முறை"ஸ்பைசஸ்' வாரியம் திட்டம்**

ஜூலை 28,2012,13:38



கம்பம்:ஏலக்காய் ஏலம் நடத்த புது முறைகளை கையாள, "ஸ்பைசஸ்' வாரியம் திட்டமிட்டுள்ளது. நிபந்தனைகளின்படி, யார் வேண்டுமானாலும் ஏலத்திற்கான உரிமம் பெறலாம். வாசனை திரவியப் பொருட்களில், ஏலக்காய் விற்பனை மட்டும், "ஸ்பைசஸ்' வாரியத்தின் அனுமதி பெற்ற மையங்களில், பதிவு அடிப்படையில் நடக்கிறது. இடுக்கி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் ஏலக்காய், புத்தடி என்ற இடத்தில் உள்ள விற்பனை மையத்தில் ஏலம் விடப்படும். ஒவ்வொரு நாளும், ஒரு நிறுவனத்தினர் ஏலம் நடத்துவர். ஏலம் நடத்த அனுமதி கேட்டு நிறுவனங்கள்,

கூட்டுறவு அமைப்புகள் "ஸ்பைசஸ்' வாரியத்திடம் விண்ணப்பித்திருந்தன.

பல ஆண்டுகளாக கிடப்பில் இருந்த விண்ணப்பங்களை, வாரியம் பரிசீலனை செய்து வருகிறது. உரிமம் வழங்க புது முறையை அமல்படுத்த வாரியம் திட்டமிட்டு உள்ளது. நிபந்தனைகளின்படி தனி நபர், அமைப்புகளுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சுழற்சி முறையும் நடைமுறைப்படுத்தப்படும். வடமாநில வியாபாரிகளின் வேண்டுகோளின்படி, டில்லியில் ஏலம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

---

# தினகரன்

தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு மனிதவள மேம்பாட்டு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-28 12:03:37

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் வட்டார நீர்வள, நிலவள திட்டம் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் நேற்று விவசாயிகளுக்கு மனிதவள மேம்பாட்டு பயிற்சி நகர் வனவியல் விரிவாக்க மையத்தில் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் ராமசாமி தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலை துறை துணை இயக்குனர் ராசு முன்னிலை வகித்தார். உளுந்தூர்பேட்டை உதவி இயக்குனர் அன்பழகன் மற்றும் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் செந்தில்வேலன் ஆகியோர் விவசாயிகளுக்கு நீர்வள மற்றும் நிலவள மேம்பாடு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்க உரையாற்றினர்.

இதில் திருநாவலூர் வேளாண்மை அலுவலர்கள் சுப்ரமணியன், ஜோதிராமலிங்கம், அருள்செல்வன், கொளஞ்சி மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விலைஏற்றம் கருதி விவசாயத்தை காக்க விலையில்லாத உரம் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-07-28 11:38:09

திருச்சி, : திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் நடந்த விவாதம்:

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நல சங்க தலை வர் கனகசபை பேசு கையில், பங்குனி

வாய்க் கால் கடந்த 10 ஆண்டுகளாக தூர் வாரா மல் ஆகாயத்தாமரை போன்ற செடி கள் தண்ணீர் ஓட்டத்தை தடுக்கிறது. உடனே தூர் வார வேண்டும் என்றார்.
டிஆர்ஓ தியாகராஜன் பதிலளிக்கையில், ஆகாய தாமரை செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.
பாரதீய கிசான் சங்க மாநில பொது செயலாளர் அய்யாக்கண்ணு பேசுகை யில், விவசாயிகளை காப்பாற்றும் வகையில் அரசு விலையில்லாத உரம் வழ ங்க வேண்டும். காட்டுப்பன்றிகளை அழிக்க வேண் டும் என்றார்.
டிஆர்ஓ தியாகராஜன் பதிலளிக்கையில், விலையில்லாத உரம் விவசாயிகளுக்கு வழங்க அரசு கவனத்துக்குகொண்டுசெல்லப்படும் என்றார்.
அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்கம் ஒருங்கிணைப்பாளர் வீரசேகரன் பேசுகையில், 17 பாசன வாய்க்கால்களுக்கும் முறை வைத்து குறைந்தபட்சம் 300 கனஅடி தண்ணீர் கிடைக்க 3 ஆயிரம் கன அடி தண்ணீரை மேட்டூரில் இருந்து திறந்து விட வேண்டும் என்றார்.
தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயி கள் சங்க மாநில தலை வர் விசுவநாதன் பேசுகை யில், மாவட்டத் தில் பருத்தி கொள்முதல் நிலையம் திறப்பதுடன், வெளி மாவ ட்டத்தில் இருந்து வாங்கி ஆடிப்பட்டத் து க்கு ராசிபருத்தி விதை வழங்க வேண்டும். 10 வரு டமாக இலவச மின் இணைப்புக் காக காத்திருக்கும் விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்கவில்லை என்றார்.

526 பேருக்கு
மின் இணைப்பு
தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் அருள்ஜோதி:
விவசாயிகளுக்கு பகலில் 7 மணி நேர மும், இரவு 5 மணி நேர மும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் 526 பேரு க்கு மின்இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட உள்ளது என்றார்.
மின்வாரிய
6 கோட்டங்களில் பெயர் மாற்ற  சிறப்பு முகாம்
திருச்சி, : திருச்சி யில் மின்வாரிய 6 கோட்டங்களில் விரைவில் பெயர் மாற்ற சிறப்பு முகாம் நடத்தப்பட உள் ளது.
இதுபற்றி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக திருச்சி பெருநகர மேற்பார்வை பொறியாளர் முத்தமிழ்ச்செல்வன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருச்சி நகரியம், கோட்டத்தில் உள்ள மின் நுகர்வோர் பயன்பெறும் வகையில் தென் னூரில் கடந்த 23ம் தேதி ‘பெயர் மாற்ற சிறப்பு முகாம்‘ நடத்தப்பட் டது. இதில் 250 பேர் பங்கேற்று பெயர் மாற்றம் தொடர்பான விண்ணப்பங்களை தலா ரூ.200 செலுத்தி அளித்தனர். இதில் உரிய ஆவணங்கள் இல் லாத 12 விண்ணப்பங் கள் நிராகரிக்கப்பட் டன. மற்ற 238 பேருக் கும் அதற்கான உத்தரவுகள் உடனே

வழங்கப்பட்டன. திருச்சி பெரு நகர வட்டத்திற்குட்பட்ட மற்ற 6 கோட்டங்களிலும் விரை வில் இதேபோன்ற சிறப்பு முகாம் நடைபெற உள் ளது. அதற்கான அறிவிப்புகள் முறைப்படி வெளியிடப்படும் என தெரிவித்துள்ளார்.

## பூச்சி, நோய் தாக்குதலால் விவசாயம் பாதிப்பா? இழப்பீடு தொகை பெறலாம்

பதிவு செய்த நேரம்:2012-07-28 11:55:31

திண்டுக்கல்,: இயற்கை சீற்றங்கள், பூச்சி, நோய் தாக்குதலால் மகசூல் பாதிக்கப்பட்டால் தேசிய காப்பீடு மூலம் இழப்பீட்டுத் தொகை பெறலாம் என்று கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் இந்த ஆண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி விவசாயத்தில் ஏற்படும் பாதிப்பு, இழப்பீடுகளில் இருந்து விவசாயிகளை மீட்க இத்திட்டம் உள்ளது. இதன்படி அனைத்துவிதமான இயற்கை சீற்றங்களால்(வறட்சி, வெள்ளம், பூச்சி, நோய்தாக்குதல்) ஏற்படும் மகசூல் இழப்பிற்கு இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது.

இந்த ஆண்டு காரீப்பருவ பயிர்களான நெல் முதல்போகம், மக்காச்சோளம், கடலை, கரும்பு, பயறுவகை பயிர்கள், வாழை ஆகிய பயிர்களுக்கு தேசிய காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி கடன் பெறாத விவசாயிகள் ஹெக்டேர் ஒன்றிற்கு நெல்லிற்கு ரூ.371ம், மக்காச்சோளத்திற்கு ரூ.195, கடலைக்கு ரூ.459, கரும்பிற்கு ரூ.ஆயிரத்து 890ம் பிரிமியம் செலுத்த வேண்டும். காப்பீட்டுத் தொகையாக ரூ.17 ஆயிரம் முதல் ஒருலட்சத்து 40 ஆயிரம் வரை பயிருக்கு ஏற்ப காப்பீட்டுத்தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது கிராமக் கூட்டுறவு கடன் வங்கிகளை அணுகி விண்ணப்பிக்கலாம்.

மேலும விபரங்கள் பெற பயிர்காப்பீட்டு சேவை மையத்தில் உள்ள 99444 06300 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம் என்று கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## வாழை இலை விலை திடீர் சரிவு

பதிவு செய்த நேரம்:2012-07-28 11:41:34

உடன்குடி : உடன்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பெரும்பாலனோர் விவசாயத்தை நம்பி உள்ளனர். பல ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததையொட்டி பலர் ஊரை காலி செய்து விட்டு வெளியூர்களுக்கு குடிபெயர்ந்தனர். இதனால் சொற் பமான அளவிலேயே ஆட் கள்

விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக பெய்த மழை யின் காரணமாக மேலும் பலர் விவசாயத்தில் ஈடுபட தொடங்கி உள்ள னர். இவர்களில் பெரும்பா லான விவசாயிகள் வாழை விவசாயத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உடன்குடி பகுதியில் இருந்து சென்னை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் வாழை இலைகள் கட்டு பஸ் மற்றும் லாரிகளில் அனுப்பப்படுகிறது. கடந்த வாரம் 200 இலை கொண்ட கட்டு ரூ.200 வரை விற்பனையானது. ஆனால் தற் போது ஒரு கட்டு ரூ.30 முதல் 40 வரை விற்பனையா கிறது. வாழை இலை திடீர் விலை சரிவால் விவசாயி கள் கவலையடைந்துள்ளனர்.

## உழவர் பெருவிழாவில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி பற்றி விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-07-28 10:54:15

அறந்தாங்கி, : அறந்தாங்கி அடுத்த ஏகப்பெருமாளூர் கிராமத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது. ஊராட்சி தலை வர் கார்த்திகேயன் தலைமை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா வரவேற்றார். அறந்தாங்கி ஒன்றியக்குழு துணை தலைவர் பெரியசாமி முன்னிலை வகித்தார். வேளாண் துறை, பொறியியல் துறை, வணிக விற்பனைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர் ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு அரசின் முக்கிய திட்டங்கள், அவற்றை பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்து கூறினர்.

120 விவசாயிகளிடமிருந்து மண் மாதிரி சேகரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு படி வம் தயாரிக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி, நீடி த்த நவீன கரும்பு சாகுபடி திட்டம், பயறு சாகுபடி திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. நெல் பூஞ்சாள கொல்லி, விதை நேர்த்தி, உயிர் உரம், மண்மாதிரி எடுத்தல் போன்ற செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன.

ஆர்டிஓ லீலாவதி பயனாளிகளுக்கு கைத்தெளிப்பான், நுண் சத்து உரம், உரம் தூவும் அலுமினிய வெசல்ஸ் ஆகியவற்றை மானிய விலையில் வழங்கி னார். ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் அன்பழகன் மற்றும் வேளாண்மை துறை அலுவலர்கள், ஆத்மா திட்ட தொழில் நுட்ப அலுவலர்கள் செய்திருந்தனர்.

## கூட்டின வளர்ப்பு முறை மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பது எப்படி?

பதிவு செய்த நேரம்:2012-07-28 12:15:07

விருதுநகர், : கூட்டின மீன் வளர்ப்பு முறை மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம் என மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

மாறுபட்ட உணவுப்பழக்கம் உடைய வெவ்வெறு வகை மீன்களை ஒரே குளத்தில் வளர்த்து மீன்

உற்பத்தியை பெருக்குவதே கூட்டின மீன் வளர்ப்பாகும். பொதுவாக குளத்தில் மீன்களுக்குத் தேவையான தாவர நுண்ணுயிர்களும், விலங்கின நுண்ணுயிர்களும், அழுகிய பொருட்களும், புல் பூண்டுகளும் உள்ளன.

தோப்பா மீன் விலங்கின நுண்ணுயிர்களையும், வெள்ளிக்கெண்டை மீன் தாவர நுண்ணுயிர்களையும் முக்கிய உணவாக உட்கொள்கின்றன. ரோகு மீன் நீரின் இடைப்பரப்பில் இரை தேடுகிறது. மிர்கால், சாதா கெண்டை போன்ற மீன்கள் நீரின் அடிப்பரப்பில் உள்ள அழுகிய பொருட்களை உணவாக உட்கொள்கின்றன. புல் கெண்டை மீன் தாவர உணவு பொருட்களை உண்ணுகிறது. இவ்வாறாக மாறுப்பட்ட உணவு பழக்கமுள்ள மீன்களை கூட்டாக குளத்தில் வளர்கும்போது உணவுக்காக போட்டி ஏற்படுவதில்லை.

மீன்வளர்ப்பு குளத்தை தயாரித்தல்

குளத்தில் வளர்ந்தி ருக்கும் பாசியையும், கொடிகளையும், புல் பூண்டுகளையும் முதலில் அகற்ற வேண்டும். உயர்ந்த ரக மீன்களை வளர்ப்பதால் அவைகளுக்கு விரோதிகளாக கருதப்படும் சிலவகை மீன்கள், நீர்பாம்பு, ஆமை, நீர்நாய் போன்றவற்றை அகற்ற வேண்டும். குளத்தின் அடியில் சேர்ந்து கிடக்கும் சகதியை முடிந்த வரை அகற்ற வேண்டும். கோடையில் வற்றிவிடும் குளமாக இருந்தால் நடுவில் ஒரு பள்ளம் தோண்டி வைப்பது அவசியம். குளத்தை சுற்றி கரைகளை உயர்த்த வேண்டும்.

குளத்திற்கு நீர் கொண்டு வரும் வாய்க்கால்கள், பழைய நீரை வெளியேற்றும் வடிகால்களில் பலகை கதவுகள், கம்பி வலைக் கதவுகளை பொருத்த வேண்டும்.

உரமிடுதல்

குளத்தில் உள்ள மீன்களுக்கு தேவையான உணவுப் பொருட்களின் அளவை உயர்த்த உரமிடுதல் அவசியம். உரத்தில் அடங்கியுள்ள சத்துப் பொருட்கள் நீரிலுள்ள மண்ணினால் ஈர்க்கப்பட்டு அவை படிப்படியாக வெளியிடப்படுகின்றன.

பாஸ்பேட் நைட்ரேட் வகையை சேர்ந்த யூரியா, அம்மோனியம் நைட்ரேட், பொட்டாசியம் ஆகியவை செயற்கை உரங்களையும், சாணம், கோழிக்ககிவு இயற்கை உரங்களையும் பயன்படுத்தலாம். ஒரு ஹெக்டேருக்கு தலா 750 தோப்பா மீன், மிர்கால், சாதா கெண்டை, வெள்ளிக்கெண்டை மீன் குஞ்சுகளும், தலா ஆயிரம் ரோகு, புல்கெண்டை மீன் குஞ்சுகளும் விட வேண்டும்.

குளத்தில் தவிடு, புண்ணாக்கு, அரிசி மாவு போன்றவற்றை உணவுப் பொருட்களாக தினமும் மீன்களுக்கு இரையாக இடலாம்.

விற்பனைக்கு ஏற்ற அளவுள்ள மீன்களை மட்டுமே பிடிக்க வேண்டும். மீன் பிடித்தவுடன் பிடிப்பட்ட வகை மீன் குஞ்சு களை மீண்டும் குளத்தில் விட வேண்டும். இவ்வாறு செய்வதால் மீன் உற்பத்தி அதிகமாக கிடைக்கும்.

இவ்வாறு மின்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேயிலை வாரியத்தின் உதவிகளை பெற விவசாயிகளுக்கு அடையாள அட்டை செயல் இயக்குனர் தகவல்

பதிவு செய்த நேரம்:2012-07-28 10:44:23

குன்னூர்,: தேயிலை வாரியத்தின் உதவிகளை பெற வசதியாக சிறு,குறு தேயிலை விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது என்று தேயிலை வாரிய செயல் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இம்மாவட்டத்தின் பொருளாதாரமே தேயிலை விவசாயம்தான் என்பதால் இதற்கு மத்திய அரசு தேயிலை வாரியம் மூலம் பல்வேறு மானிய உதவி களை வழங்கி வருகிறது. குன்னூரில் செயல்பட்டு வரும் தென்னிந்திய தேயிலை வாரியம் மூலம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வந்தாலும் தேயிலை விவசாயிகள் தங்கள் ஆவணங்கள் குறித்த முழு விவரத்தை வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதன்முறையாக சிறுதேயிலை விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியதாவது:

தென்னிந்தியா முழுவதும் பல ஆயிரக்கணக்கான தேயிலை விவசாயிகள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் புதிதாக அடையாள அட்டை (பயோ மெட்ரிக் கார்டு) வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அட்டையில் விவசாயிகள் பெயர், முகவரி மட்டுமல்லாமல் அவர்களின் தேயிலைத்தோட்டத்தின் பரப்பளவு, பசுந்தேயிலையை வினியோகம் செய்யும் தொழிற்சாலை உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த அட்டையை தேயிலை வாரிய உதவிகளுக்கு பயன்படுத்தலாம். ஆனால் மானியம் பெற கண்டிப்பாக உரிய ஆவணங்கள் தேவை.

இதுமட்டுமல்லாமல் தென்னிந்தியாவில் உள்ள ஏல மையங்களில் வர்த்தகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. புதிதாக வர்த்தகர் நியமத்தினருக்கான உரிமம் பெற இதுவரை கொல்கத்தாவில் உள்ள இந்திய தேயிலை வாரிய அலுவலகத்தையே அணுகி வந்தனர். தற்போது இதற்கான உரிமத்தை தென்னிந்திய தேயிலை வாரிய அலுவலகத்திற்கு முறைப்படி விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். இதன்மூலம் வர்த்தகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் தேயிலைத் தொழிலும் மேம்படும்.

## சிறு விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை தமிழக முதல்வரின் உத்தரவால் நீலகிரி விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-07-28 10:43:21

ஊட்டி,: நீலகிரி தேயிலை விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் ரூ.2 கூடுதல் விலை (மானியம்) வழங்கியுள்ளதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஊட்டியி ல் எம்.எல்.ஏ., அலுவலகத்தில் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தொண்டர்கள் கொண்டாடினர்.

நீலகிரி மாவட்டத்தில் பிரதான தொழிலாக தேயிலை தொழில் இருந்து வருகிறது. தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும், கூடுதல் விலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை தொடர்ந்து ஆட்சி பொறுப்பேற்ற ஒரு சில மாதங்களில் நீலகிரி தேயிலை விவசாயிகள், அதாவது மாவட்டத்தில் உள்ள 12 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் விலையில் இருந்து கூடுதலாக ரூ.2 வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டார். இதனால், பெரும்பாலான தொழிற்சாலைகளில் தனியார் தொழிற்சாலைகளில் நிர்ணயம் செய்யப்படும் விலையை காட்டிலும் கூடுதலாக கிலோ ஒன்றுக்குரூ.10 முதல் 15 வரை விலை கிடைத்தது.

தற்போது மீண்டும் விவசாயிகள் நலன் கருதி ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் விநியோகம் செய்யப்படும் தேயிலைக்கு கூடுதலாக கிலோ ஒன்றுக்கு ரூ.2 வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். இதனால், விவசாயிகளுக்கு தனியார் தொழிற்சாலைகளில் கிடைக்கும் விலையை விட கூடுதலாக விலை கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், தேயிலை தொழிற்சாலைகள் இயந்திரங்கள் பழுது பார்த்து பராமரிப்பிற்காக ரூ.5 கோடியே 46 லட்சமும், இன்ட்கோ சர்வ் மூலம் கட்டிடங்களை பழுது பார்க்க அனுமதிக்கப்பட்டு, அதற்காக ரூ.54 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார். இதன் மூலம் தொழிற்சாலைகள் பழுதான இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டோ அல்லது மாற்றம் செய்யப்படுவதன் மூலம் தேயிலை தூள் உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழக முதல்வரின் இந்த உத்தரவால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறு தேயிலை விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தேயிலைக்கு கூடுதல் விலையால் மாவட்டம் முழு வதும் உள்ள அதிமுக.,வினர் பட்டாசு வெடித்தும், இனி ப்பு வழங்கியும் கொண்டாடி வருகின்றனர். ஊட்டியில் உள்ள அதிமுக., மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் அர்சுணன் தலைமையில் பட்டாசு வெடித்தும், இனிப்புக்கள் வழங்கியும் கொண்டாடப்பட்டது. இதில், ஏராளமான நிர்வாகிகள் மற்றும்

தொண்டர்கள் கலந்துக் கொண்டர். ஊட்டி எம்.எல்.ஏ., அலுவலகத்தில் எம்.எம்.ஏ., புத்திசந்திரன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், பாசறை செயலாளர் வினோத், ஊட்டி நகராட்சி துணை தலைவர் கோபாலகிருஷ்ணன், நகர செயலாளர் ராஜாமுகமது, முன்னாள் நகர செயலாளர் தேவராஜ் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

## அவரையில் அள்ள அட்மா அட்வைஸ்

பதிவு செய்த நேரம்:2012-07-28 12:05:32

தொண்டி, : இரட்டிப்பு மகசூல், மும்மடங்கு வருவாய் பெறும் அட்மா திட்டத்தின் கீழ் துவரை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறை யினர் ஆலோசனைகள் வழங்கியுள்ளனர். தமிழக அரசு தற்போது இரண்டாம் பசுமைப்புரட்சியை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடும், பல்வேறு தொழில்நுட்பத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் படி இரட்டிப்பு மகசூலும், மும்மடங்கு வருவாயும் பெறவேண்டும் என்பதே குறிக்கோள். இதன் ஒருபகுதியாக மத்திய, மாநில அரசுகள் இணைந்து, அட்மா திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், துவரையில் கூடுதல் மகசூல் பெறுவது குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

ஒரு ஏக்கருக்கு ஒன்று முதல் 2 கிலோ விதை போதுமானது. 5*3 அடி இடைவெளியில் 2 ஆயிரத்து 900 செடிகள் ஒரு ஏக்கருக்கு பராமரிப்பதால் நல்ல காற்றோட்டம், வேர் வளர்ச்சி, வேர் ஆழம் அதிகரித்து, உர உபயோகத்திறன் அதிகமாகி 60 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். கிருஷ்ணகிரி, வேலூர் மாவட்டங்களில் இது போன்ற தொழில்நுட்பத்தில் ஏக்கருக்கு ஒரு டன் பயறும், ஏக்கருக்கு 10 டன் பச்சைக்காயாகவும் மகசூல் எடுத்துள்ளனர்.

மழை தாமதமாக பெய்தாலும், மானாவாரி நிலத்தில் மழைவந்ததும் சரி யான ஈரப்பதத்தில் சரி யான இடைவெளியில் நட ஏற்றது. இதனால் ஒரு மாத பயிரின் வயது சேமிக்கப்படு கிறது. முதல்களை எடுப்பது குறைவதுடன், மற்ற ஊடு பயிர் சாகுபடி செய்வதும் எளிது. சொட்டு நீர் பாச னம் செய்து மற்ற பணப்பயிர்களை போல பராமரித்து இருமடங்கு லாபம் பெற ஏற்றது. நட்ட 30 நாளில் பயிரின் நுனியை கிள்ளிவிடுவதால் பக்கக்கிளைகள் அதிகமாகி, பூக்கும் திறன் அதிகரிக்கும். இத னால் நல்ல திரட்சியான காய்கள் கிடைக்கும். மழை அல்லது ஈரம் மண்ணில் போதாமல் இருக்கும்பட்சத்தில் காயாக பறித்து விற்று வருமானம் பெறலாம்.

நடவுமுறை: குழித்தட்டு ஒரு மிமி தடிமன் மற்றும் 1.5 இன்ச் குழியுடன் கூடிய முட்டை பாக்ஸ் போன்ற குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நாற்றுக்கழிவு மற்றும் உயிர் உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லி கள் மற்றும் இயற்கை உரங்கள் கலந்த கலவையை நிரப்பி விதை ஊன்றி நாற்று உயர்தொழில் நுட்பத்தில் பராமரிக்கவேண்டும்.இவ்வாறு தெரிவித்துள்ளனர்.